# பந்தியைக் குறித்து மிகவும் அக்கறையாக இருத்தல்

*"இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.*

*ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்" (1 கொரிந்தியர் 11:27-33).*

ஒவ்வொரு சிலாக்கியமும் அதனுடன் இணைந்துள்ள ஒரு பொறுப்புடனேயே வருகிறது. இயேசு நிலைநாட்டிய இராப்போஜனத்தில் பங்கேற்றல் என்பதைக் காட்டிலும் அதிக மேன்மையான கனத்திற்குரிய விஷயத்தை நாம் நினைத்துப் பார்த்தல் மிகவும் கடினமாகும்; மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தைத் தக்க வகையில் ஆசரிக்கத்தவறுதல் பற்றி இராப்போஜனத்தின் ஆண்டவரும் நமது சுய மனச்சாட்சிகளும் குற்றம் உணர்த்துவதைக் காட்டிலும் அதிகம் பேரழிவுக்குரிய நியாயத்தீர்ப்பைப் பற்றியும் நாம் நினைக்க இயலாது.

கொரிந்தியர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் முறையாகக் கூடிவந்து, ஒவ்வொரு வாரத்திலும் இராப்போஜனத்தில் பங்கேற்றுக் கொண்டிருந்தனர் மற்றும் அவர்கள் ஐக்கியத்தில் நட்புறவுடனும் சீராகவும் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் அவர்கள் நினைத்துப் பார்க்க இயலாததைச் செய்திருந்தனர்: அவர்கள் இராப்போஜனத்தை அதன் தெய்வீக நோக்கத்துடனும் மிக உயர்வான வடிவமைப்புடனும் கடைப்பிடிக்கத் தவறியிருந்தனர். அவர்கள் இராப்போஜனத்தைக் கையாண்ட வகையைக் குறித்து அவர்களைப் பவுல் மிகவும் கடிந்துகொண்டார். அவர்கள் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவர்களாக இருந்தனர் என்று அவர் அறிவித்தார்.

இன்றைய நாட்களில் இராப்போஜனத்தை இலோசானதாகவும் தகுதியற்ற வகையிலும் நினைத்தல் என்பது நமக்குச் சாத்தியமாக உள்ளதா? நிச்சயமாகவே இந்தக் கேள்வியானது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் முக்கியத்துவத்தில் உயர்வான

இடத்தைக் கொண்டுள்ளது.

## அவலத்தின் உண்மைநிலை

1 கொரிந்தியர் நிருபத்தில் உள்ள வசனப் பகுதியின் வெளிச்சத்தில், நாம் இந்தக் கேள்விக்கு பலத்த நேர்மறைக்கூற்றுடன் பதில் அளித்தாக வேண்டும்! இந்த சத்தியத்தின் உண்மை நிலையை பவுல் நமக்கு முன்பாக வைத்தார். "இப்படியிருக்க, எவன்" என்ற வார்த்தைகளில் அவர் பந்திமேஜையைச் சுற்றிலும் அமருகிற எல்லாரையும் உள்ளடக்கினார். "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்" என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 11:27). "அபாத்திரமாய்" என்ற வார்த்தை, இயேசுவின் மரணத்தைப் புறக்கணித்தல், தவறாகப் பயன்படுத்துதல் அல்லது இலேசாக எண்ணுதல் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் அவரது உடலையும் இரத்தத்தையும் நினைவுகூராதிருத்தல் என்று அர்த்தப்படுகிறது. மேலும் பவுல், "என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்" என்றும் கூறினார் (1 கொரிந்தியர் 11:29). யோவான் ஸ்நானன் பிரசங்கம் செய்து, அவரது போதனையை மக்கள் புறக்கணித்தபோது, அவர்கள் யோவானின் செய்தியினாலேயே நியாயந்தீர்க்கப் பட்டனர். ஒரே சூரியன் வெண்ணெயை உருகச்செய்து களிமண்ணை இறுகச் செய்வது போன்று, இயேசுவின் பூமிக்குரிய ஊழியம் சிலரை இரட்சித்தது ஆனால் மற்றவர்களை நியாயந்தீர்த்தது. கர்த்தருடைய இராப்போஜனத்தை தக்கவகையில் ஆசரித்தல் என்பது, நாம் இயேசுவின் சித்தத்தின்படி வாழ்கிறோம் என்ற உறுதிப்பாட்டுடன் நம்மை ஆசீர்வதிக்கிறது. இதைத் தகுதியற்ற வகையில் கடைப்பிடித்தல் என்பது, நாம் நமது கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறோம் என்பதை உணர்ந்தறிதலுடன் நம்மை சபிக்கிறது.

இந்த சந்தர்ப்பப்பொருளில் கொரிந்தியர்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தைத் தாங்கள் உண்ணுதலுக்கு மேலானதாக இருக்கவும் அதைக் குழப்பவும், ஒருவர் மற்றவருடனான தங்கள் இராப்போஜனத்தை, தங்கள் ஐக்கிய விருந்தை அனுமதித்து இருந்தனர். அவர்கள், மீட்பரின் மரணத்தின் நினைவுகூருதலில் பங்கேற்பதைக் காட்டிலும் தங்கள் மாம்சப்பிரகாரமான உணவை உண்ணுதலில் ஆர்வமாக இருந்தனர். கொரிந்தியர்கள் செய்ததை நாமும் செய்துவிடாதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## அவலத்தில் நியாயத்தீர்ப்பு

இதே வசனப் பகுதியில் நாம், இராப்போஜனத்தின் பரிசுத்த தன்மையைக் காணுகிறோம். பவுல், "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 11:28). கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்ற வகையில் கடைப்பிடித்தலுக்கு, நாம் அதை உண்பதற்கு முன்னும்

உண்ணும்போதும், நம்மையே நாம் சோதித்து அறிவது தேவைப்படுகிறது. இந்த சோதித்தறிதல் என்பது "இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தத்தை நான் பகுத்தறிகிறேனா?" என்ற கேள்வியைச் சுற்றிச் சுழல்கிறது.

இந்தத் காரணத்தினால், இராப்போஜன வேளையின்போது சில கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய மரணம் பற்றிய வேதவாக்கியங்களின் வசனப்பகுதி ஒன்றை வாசித்து, அவரது மரணத்தைத் தாங்கள் நினைவுகூருதலுக்குத் தங்களை வழிநடத்த அந்த வேதவசனப் பகுதியை அனுமதிக்கின்றனர். மற்ற கிறிஸ்தவர்கள், இயேசுவின் மரணத்தைக் குறித்துத் தங்கள் பிதாவிடம் ஜெபித்து, அவரது குமாரனுடைய சரீரம் மற்றும் இரத்தம் ஆகியவற்றிற்காக அவருக்கு நன்றி செலுத்துதலைத் தேர்ந்து கொள்கின்றனர். இன்னும் பிறர் தங்கள் சிந்தைகளில் இயேசுவின் உண்மையான மரணத்தைச் சித்தரித்து, தங்களுக்காக செய்யப்பட்ட மாபெரும் தியாகத்தை உணர்ந்து அறிகையில் அதை மிக விபரமாக மனக்கண்ணில் காண்கின்றனர்.

நாம் பிற்பாடு நியாயந்தீர்க்கப்படுபவர்களாக இருப்பதைக் காட்டிலும் இப்போது நம்மை நாமே சோதித்து அறிதல் மிகவும் நல்லது என்று விவாதித்தார். அவர் பின்வருமாறு எழுதினார்:

> நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோட ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் (1 கொரிந்தியர் 11:31, 32).

தக்க வகையில் சோதித்து அறிந்தால் என்பது வழக்கமாக முன்னேற்றத்தை விளைவிக்கிறது. ஏற்புடைய வகையிலான கடிந்துகொள்ளுதல் என்பது வழக்கமாக திருத்துதலைக் கொண்டு வருகிறது. கர்த்தருடைய ஒழுங்குபடுத்துதல் என்பது பிரதானமாக கர்த்தருடைய வசனத்தில் மூலமாக நமக்குக் கொண்டுவரப்படுகிறது. நாம் வாசிக்கிறோம், நாம் கற்றுக்கொள்கிறோம், நாம் மனந்திரும்புகிறோம் மற்றும் நாம் மாறுகிறோம். இதைச் செய்வதினால் நாம் கடைசிநாளில் நியாயத்தீர்ப்பு பற்றிப் பயம் கொள்ளக் காரணம் எதுவும் கொண்டிராது இருப்போம்.

## அவலத்தின் விளைவு

பவுல், கர்த்தருடைய இராப்போஜனத்தை உண்ணுதலில் நமது பொறுப்பு பற்றிய உண்மை நிலையிலிருந்து, இராப்போஜனத்தின் பரிசுத்த தன்மையையும் பின்பு அதைத் தவறாகப் பயன்படுத்துதலில் உள்ள அவலத்தையும் எடுத்துரைக்கக் கடந்து சென்றார். அவர், "இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 11:30). இயேசுவின் மரணம்தான் கிறிஸ்தவ வாழ்வின் மையமாக உள்ளது. அவரது மரணத்தினால் நாம் பிழைக்கிறோம்; நமது நம்பிக்கையின் ஒவ்வொரு பகுதியும் நமக்காக அவர் செய்த தியாகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஒருவர் தமது சகோதர சகோதரிகளுடன் இந்தப் பந்தி மேஜையைச் சுற்றி அமர்ந்து தமக்காக இயேசு செய்துள்ளதை பயபக்தியுடன் நினைவுகூரத் தவறுகிறபோது, அவர் தமது ஆத்துமாவின் அவலமான பலவீனத்தை, சுகவீனத்தை மற்றும்

உறக்கத்தன்மையை வெளிப்படுத்துகிறார். பவுல் "இதினிமித்தம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்.

கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்புடைய வகையில் கடைப்பிடிக்காமல், நாம் தேவனுடைய சித்தத்தைக் குறித்து கவனமுள்ளவர்களாக, கர்த்தருடைய விருப்பங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுத்தலில் நிலைத்திருப்பவர்களாக அல்லது கர்த்தருடைய அன்பில் தொடர்ந்து வளருபவர்களாக இருக்க முடியாது.

கொரிந்தியர்கள் இராப்போஜனத்தின் விஷயத்தைக் கட்டுப்பாட்டிற்குப் புறம்பே செல்ல அனுமதித்திருந்தனர். அவர்கள் அதில் பங்கேற்றனர், இருப்பினும் அவர்கள் அதில் ஏற்புடைய வகையில் பங்கேற்கவில்லை. செயல்விளைவில் பவுல் அவர்களிடம், "நீங்கள் இராப்போஜனத்தில் பங்கேற்க ஒன்றுகூடி வருகிறீர்கள், ஆனால் நீங்கள் அதில் பங்கேற்க வேண்டிய முறைப்படி பங்கேற்பதில்லை. அதற்கு முன்பாக நீங்கள் உங்கள் ஐக்கிய விருந்தை வைக்கிறீர்கள். நீங்கள் இராப்போஜனத்தில் பங்கேற்பதைவிட உணவு உண்ணுதலில் அதிக அக்கறை கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறினார்.

## முடிவுரை

பவுலின் இந்தச் செய்தியில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன? நாம் இதில் உண்ணும் ஒவ்வொரு முறையும் நம்மை நாமே சோதித்து அறிவது அவசியம் என்பதைக் கவனிக்க வேண்டும். நம்மையே நாம், "நான் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவுகூருகிறேனா?" என்று கேட்டுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இந்த இராப்போஜனத்தை மிகமும்முரமாகக் கைக்கொள்ளுதலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கத் தவறுதல் என்பது கடுமையான விளைவுகளைக் கொண்டிருக்க முடியும் என்பதைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். கர்த்தருடைய இராப்போஜனம் இல்லாத கர்த்தருடைய நாள் இருக்கக் கூடாது; கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கண்ணியத்துடன், நினைவுகூருதலுடன் மற்றும் அதற்கு உரிய ஒருமுகப்பாட்டுடன் கடைப்பிடிக்கப் படவேண்டும்.

---

*"நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன்" (1 கொரிந்தியர் 11:34அ).*